மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள், அப்பகுதியில் கட்டப்பட்டுள்ள வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாக இங்கே கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். வல்லுநர் குழுவினை அனுப்பி அதனை ஆய்வு செய்து அது பொது மக்கள் வாழ்வதற்கு ஏற்றநிலையில் இல்லை என்று ஆய்வறிக்கை தரப்பட்டால், அதை இடித்துவிட்டு, அங்கு வசிப்பவர்களுக்கு, 400 சதுரடியிலான புத்தம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இ) பொருளாதாரத்தில் நலிவுற்ற பொதுப் பிரிவினருக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீடு குறித்த அனைத்துக் கட்சி கூட்ட முடிவு மற்றும் அக்கூட்டத்தில் பங்கேற்ற கட்சிகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேறிய ஜாதியினருக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு குறித்த மத்திய அரசின் அறிவிப்பு குறித்து இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டு, ஒரு முடிவு எடுக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* All Parties Meeting *கூட்டப்பட்டு, அதுகுறித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். நேற்றைய தினம் அப்படி ஒரு கூட்டம் நடைபெற்றதாக நான் கேள்விப்பட்டேன். ஆகையினால், அந்தக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை இந்த மாமன்றம் அறிய விரும்புகிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்த விளக்கத்தைத் தர வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் கூட்டப்பட்டது. பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படுகிற சூழல் ஏற்பட்டு, அதனுடைய ஒரு பகுதியாக மருத்துவக் கல்லூரிகளில் சுமார் 1,000 இடங்கள் கூடுதலாகக் கிடைக்கும் என்கிற ஒரு தகவலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதுகுறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கலந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடாக சில பல கருத்துகளை அங்கே தெரிவித்தார்கள். பல்வேறு கட்சியினரும் அவரவர்களுடைய கட்சிக் கொள்கையின் அடிப்படையில், தங்களது கருத்துகளைத் தெரிவித்தார்கள். நீண்ட நெடிய நேரமாக, அதாவது கிட்டத்தட்ட பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 9 மணி வரை அந்தக் கூட்டம் நடைபெற்றது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு அம்மா அவர்கள் காலம் வரை பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய மற்றும் ஆதி திராவிட பெருமக்களுக்கு இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 69 சதவிகித இட ஒதுக்கீட்டை இந்திய அரசமைப்பின் 9–வது அட்டவணையில் சேர்த்து, அரசமைப்பு அங்கீகாரத்தை . . . (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்ததற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் சொல்லி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் சொல்லுங்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்வாறாக திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியாக உச்சபட்சமாக 69 சதவிகித இட ஒதுக்கீட்டினை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9–வது அட்டவணையில் சேர்த்து உறுதி செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை. அந்த வரலாற்றினைப் பதிவு செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை இன்றைக்கு நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து திராவிட இயக்கத்தினுடைய பரிணாம வளர்ச்சியாக, 69 சதவிகித

இட ஒதுக்கீட்டை உறுதி செய்த ஒரே தலைவர், ஒரே முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பிரச்சினையில் நம்முடைய நிலைப்பாடு என்ன என்பது குறித்துத்தான் நேற்றைய கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் இறுதியில் அரசினுடைய நிலைப்பாடாக இந்தப் பிரச்சினை குறித்து முடிவு எடுக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இட ஒதுக்கீட்டை உறுதி செய்து, ஒரு வரலாற்றினைப் படைத்திருக்கிறார்கள். அது உண்மையாக நிலைநிறுத்தப்படும். அதற்கு எந்தவித பங்கமும் வராது. இந்த 10 சதவிகித இட ஒதுக்கீட்டை எடுத்துக்கொள்ளலாமா, வேண்டாமா, இது இந்த 69 சதவிகித இட ஒதுக்கீடுக்குக் குந்தகம் விளைவிக்குமா, விளைவிக்காதா, என்பதெல்லாம் சட்ட வல்லுநர்களைக் கலந்து பேசி ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதையும், அந்த முடிவு எதிர்காலத்தில் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, ஆதி திராவிடர் பெருமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாத வகையில் இருந்தால் நாம் ஏற்றுக்கொள்வோம், இல்லாவிட்டால் நிராகரிக்கலாம் என்ற முடிவினையும் எடுத்திருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவு வந்த பிறகு, மேற்கொண்டு விவாதிக்கலாம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவிக்கிறபோது, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளையெல்லாம் நேற்று அழைத்தோம் என்று சொன்னார்கள். அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு என்ன இலக்கணம்? நான் ஒன்று கேட்கிறேன், தேர்தலிலே வெற்றிபெற்று பாராளுமன்றத்திற்குப் போயிருந்தால், சட்டமன்றத்திற்கு வந்திருந்தால் அவர்கள் நம்மைப் பொறுத்தவரையில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அல்லவா?* Election Commission–*னால் அறிவிக்கப்படாத, உங்களுக்கு வேண்டிய கட்சிகளையெல்லாம் கூப்பிட்டிருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளைத்தான் கூப்பிட வேண்டும் என்று எண்ணினோம் உங்களுடைய தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதால், சில கட்சிகளைக் கூப்பிடலாம்*

என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தினால்தான் மற்றவர்களையும் கூப்பிட்டார்கள். இல்லையென்றால், எல்லோரையும் கூப்பிட்டிருக்க மாட்டார்கள். சில கட்சிகளைச் சொல்லி கூப்பிட வேண்டுமென்று சொன்ன காரணத்தினாலும், அந்தத் தலைவர்களும் இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே பேசுவதற்கு வாய்ப்பைத் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலும்தான் எல்லோரையும் கூப்பிட்டார்கள். சில பேரிடம் கூப்பிட்டுப் பேசினார்கள். ஏனென்றால், மறுபடியும் அத்தனை கட்சித் தலைவர்களையும் கூப்பிட வேண்டுமென்றால், 60 பேரையும் கூப்பிட வேண்டும். அதற்கு ஒரு நாள் முழுவதும் ஆகும். ஏற்கெனவே விவசாயிகள் பிரச்சினை வருகின்றபொழுது காலையில் கூட்டி, இரவுதான் அதை முடித்தோம். அதனால்தான், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளை மட்டும் கூப்பிடலாம் என்று சொன்னோம். இருந்தாலும், உங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சில கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசினால் நன்றாக இருக்கும் என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், என்னோடு கலந்து பேசி கூப்பிடலாம் என்று சொன்னார்கள். நானும் அதற்கு சம்மதித்துத்தான் அவர்களை அழைத்தோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கருத்துக்கு அப்படி அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் என்ற நிலையை நாம் எடுத்தோம் என்று சொன்னால், நேற்று திராவிட கழகத்தினுடைய தலைவர் உயர்திரு மரியாதைக்குரிய கி. வீரமணி அவர்கள் பங்கேற்றிருந்தார்கள். அங்கீகரிக்கப்பட்ட கட்சியில், அவருடைய இயக்கம் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது. அவர்கள் பேசுகின்றபொழுது சில நல்ல பல அரிய கருத்துகளை நமக்குத் தெரிவித்தார்கள். உயர்திரு நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தபொழுது அரசமைப்புச் சட்டத்தின்படி 9 நீதிபதிகள் கொண்ட Constitution

Bench கூறிய தீர்ப்பையெல்லாம் மேற்கோள் காட்டினார்கள். அந்தத் தீர்ப்பு எந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் சொன்னார். உண்மையிலேயே அது நமக்குத் தேவையான கருத்துகளாக நேற்றைய கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. ஆகவே, இப்பொழுது அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அல்லாமல் மற்ற கட்சிகளும் இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், பொது வாழ்க்கையில் அவர்களுக்கென்று ஒரு தனிக் கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். தனிக் கொள்கை என்று சொன்னால், குறிப்பிட்ட அந்தச் சமுதாயத்திற்கு ஏற்ற கொள்கை அல்ல, பொதுவான கொள்கையைக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களை எல்லாம் அழைத்து, அவர்களுடைய கருத்துகளையும் கேட்கின்ற ஒரு நிலையை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம். இதில் எந்த வேறுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், கொங்குநாடு கட்சி இன்றைக்கு* Parliament*–ல் இடம் பெற்றிருக்கிறது. மனிதநேய மக்கள் கட்சி இங்கு சட்டமன்றத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு நீங்கள் ஏன் அழைப்பு விடுக்கவில்லை? ஆனால், வேறு சில கட்சிகளை அழைத்திருக்கிறீர்கள். நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் எல்லாம்* member *ஆகக்கூட இல்லை. ஆகையினாலே நான் சொல்கிறேன், உங்களுக்கு வேண்டிய கட்சிகளை அழைத்துவிட்டு, அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்று சொல்வது தவறு. கூப்பிட்டோம் என்று சொல்லுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஏதோ, எங்களுக்கு விருப்பமுள்ளவர்களைக் கூப்பிட்டோம் என்று சொல்லுங்கள். ஆனால், அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்று ஓர் அதிகாரத்தைக் கொடுக்காதீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு எந்தவித பாகுபாடும் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் யார் யாரை அழைக்க வேண்டுமென்று திரும்பவும் ஒரு பட்டியல் கொடுத்தார்கள். அவர்களையெல்லாம் அழைத்திருக்கின்றோம்.*

2019 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11–35

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் பட்டியல் தரவில்லை, என்னுடைய கருத்தைச் சொல்லியிருந்தேன். எப்படியென்று சொன்னால், 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களுக்கு விருது கொடுத்தவர் ஆசிரியர் அவர்கள். ஆகவே, அவர் வந்தால், சிறப்பாக இருக்குமென்ற அந்தக் கருத்தைத்தான் சொன்னேனே தவிர, மற்ற கட்சிகளின் தலைவர்களை எல்லாம் நான் அழைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இருந்தாலும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதைத் தவறு என்று சொல்லவில்லை. நேற்றைக்கு அந்தக் கூட்டத்திலே நான் அதைப்பற்றிப் பேசியிருந்தால் பிரச்சினைகள் வேறுமாதிரி திசைநோக்கிப் போயிருக்கும். அதற்காக அதைப்பற்றி நான் பேசவில்லை. அதுமட்டுமல்ல; முதலமைச்சர் அவர்களும் அந்தக் கூட்டத்திற்கு நியாயமாக வந்திருக்க வேண்டும். நான் அதைக்கூட எடுத்துப் பேசவில்லை. சில கட்சித் தலைவர்கள் எல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால், மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எங்களை ஏன் அழைக்கவில்லை என்ற கோரிக்கையை எங்களிடத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்திய ஜனநாயகக் கட்சி, கொங்குநாடு மக்கள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள், இருந்தார்கள். நான் கேட்கிறேன், ஜான் பாண்டியனுடைய கட்சி வந்திருக்கிறது; புரட்சி பாரதக் கட்சி வந்திருக்கிறது. இவர்களை அழைத்ததை நான் தவறு என்று சொல்லவில்லை. இவர்களெல்லாம் அழைக்கப்படுகிறபோது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதிநிதிகளாக இருந்தவர்கள், இருக்கக்கூடியவர்கள் அழைக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கட்சிகளின் பெயரைச் சொல்லி அந்தக் கட்சிகளைச் சிறுமைப்படுத்த வேண்டாம். இனிமேல்*

இம்மாதிரியான குறைபாடுகள் இல்லாமல் அனைவரையும் அழைக்கின்ற ஒரு சூழ்நிலையை நாங்கள் உருவாக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றபொழுது முதலமைச்சர் கலந்து கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னார். கடிதம் எழுதும்போதே படித்துப் பாருங்கள், யார் தலைமையில் நடைபெறும் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே, இந்த இட ஒதுக்கீடு பிரச்சினை சம்பந்தமாக கூட்டம் கூட்டப்படும் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதிலே எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. நான் வந்தாலும் சரி, துணை முதலமைச்சர் வந்தாலும் சரி, நீங்கள் சொல்கின்ற கருத்தை அரசு பரிசீலிக்கும். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு துணை முதலமைச்சர் கலந்துகொண்டு அந்தக் கூட்டத்தை நடத்தினார். இன்னொன்று, நாங்கள் இப்படிப்பட்ட பிரச்சினை வரக் கூடாது என்றுதான்... (குறுக்கீடு) இருங்கள், குறுக்கிட்டு குறுக்கிட்டுப் பேசினால், எப்படிப் பேசுவது? (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் குறுக்கே இதுமாதிரி பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதெல்லாம் முறையில்லை, சரியில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் இப்படியே குறுக்கிட்டுப் பேசினால், எப்படி அவையை நடத்த முடியும்? அவைக்கென்று ஒரு தனி மரபு இருக்கின்றது. அந்த மரபைக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், அவர் மூத்த உறுப்பினர். ஏற்கெனவே சட்டமன்றத்தில் உறுப்பினராக*

இருந்த அவருக்கு அவையின் நடவடிக்கை முழுவதும் தெரியும். ஆக, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை பேசிக் கொண்டிருக்கும்போது அதை இடைமறிக்கின்றபோது, அந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவமே மறைந்து போய்விடும். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றபோதுகூட, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளைத்தான் கூப்பிட்டு, அழைத்துப் பேச வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நாங்கள் இதைத் தெரிவித்தோம். ஆனால், ஒருசில கட்சிகளின் பெயர்களைச் சொல்லி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அந்தக் கட்சியில் இடம்பெறுகின்றபோது அவர்களுடைய கருத்துகளைச் சொல்வார்கள் என்ற அடிப்படையிலேதான் அவர்களை அழைத்தோமேயொழிய, மற்றபடி எதுவும் கிடையாது. கிட்டத்தட்ட 70, 80 கட்சிகள் இருக்கின்றன. ஆகவே, அனைவரையும் அழைக்க வேண்டுமென்று எண்ணினால், கிட்டத்தட்ட ஒருநாள் முழுவதும் கூட்டம் நடைபெறும். ஆனால் அதனுடைய கருத்து நீர்த்துப் போய்விடும். ஒவ்வொருவரும் ஒரு கருத்தைச் சொல்வார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தாலே, இதில் முக்கிய, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மட்டுமே கலந்துகொண்டு பேசுகின்றபோது உண்மையிலேயே அதற்கு ஒரு வடிவம் கிடைக்குமென்ற அடிப்படையிலேதான், முதலிலே அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளை மட்டும் அழைத்துப் பேசலாமென்று நாங்கள் நினைத்து, அதைத் தெரிவித்தோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், சில கட்சிகளைக் குறிப்பிட்டு அவர்களுடைய கருத்துகளையும் நீங்கள் கேட்டறிந்தால், இதற்கு வலு சேர்க்குமென்ற கருத்தைச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே மற்றவர்களையும் கூப்பிடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

5. 4–7–2019 அன்று எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதல்வர் அவர்களின் பெயரை அவையில் விளித்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது இதுமாதிரி நீங்கள் அங்கிருந்து பேசுவது முறையில்லை. நீங்கள் கையைத் தூக்குங்கள். வாய்ப்பு இருந்தால் நான் தருவேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, இதே முறையை இந்தப் பக்கம் கடைப்பிடித்தால்*